# குழந்தைகள் மற்றும் பாதிப்புக்குள்ளாகக் கூடிய வயதுவந்தோர்களைப் பாதுகாப்பதற்கான Network of Asia and Pacific Producers இன் கொள்கை மற்றும் நடைமுறை

**டிசம்பர் 2017**

**இதை செயல்படுத்த தகுதியானவர்கள்:** Network of Asia and Pacific Producers (NAPP), தொழிலாளர்கள் மற்றும் தயாரிப்பாளர்களின் Fairtrade / NAPP அமைப்புகள், NAPP பணியாளர்கள், NAPP உடன் பணிபுரியும் தன்னார்வலர்கள், NAPP இன் இயக்குநர்கள் குழு மற்றும் பல்வேறு குழுக்களில், மற்றும் NAPP க்காக வேலை செய்யும் போது அல்லது உத்தியோகப்பூர்வமாக பயணம் செய்யும்போது, குழந்தைகள் அல்லது பாதிக்கப்படும் பெரியவர்களுடன் தொடர்பு கொள்ளும் நிறுவனத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் வேறு எந்த நபரும்.

**மூலோபாயம்:** குழந்தைகள் மற்றும் பாதிக்கப்படக்கூடிய வயதுவந்தோர்களின் பாதுகாப்பை ஊக்குவிக்கும் ஒரு அமைப்பு, குழந்தை தொழிலாளர்கள் மற்றும் கட்டாயபடுத்தி வேலை செய்யவைப்பது மற்றும் இது தொடர்பான அதிகார வன்முறை மற்றும் சுரண்டல் உள்ளிட்டவற்றை நீக்குவதை நோக்கமாகக் கொண்ட நடவடிக்கைகளை எடுப்பது, 0020 ஆகியவையே NAPP இன் அணுகுமுறையாகும்.

**A. நோக்கம்:**

குழந்தைகளின் உரிமைகள் தொடர்பான ஐக்கிய நாடுகளின் மாநாடு மற்றும் மனித உரிமைகளின் உலகளாவிய பிரகடனம் ஆகியன் உலகில் குழந்தைகளின் உரிமைகள் உட்பட தனிநபரின் உரிமைகளை பாதுகாக்கின்றன, ஊக்குவிக்கின்றன.

NAPP (Network of Asia and Pacific Producers) இல், நாங்கள் இந்த உரிமைகளை ஆதரிக்கிறோம், மேலும் குழந்தைகள் மற்றும் பாதிக்கப்படக்கூடிய வயதுவந்தோர்களின் பாதுகாப்பு, வளர்ச்சி மற்றும் நல்வாழ்வுக்கான உரிமைகளுக்கான அங்கீகாரத்தை உறுதிப்படுத்த நாங்கள் உழைக்கின்றோம்.

நாங்கள் குழந்தைகள் மற்றும் பாதிக்கப்படக்கூடிய மக்களை எந்தவொரு மற்றும் அனைத்து அச்சுறுத்தல்கள் அல்லது தீங்குகளிலிருந்தும் பாதுகாக்க உழைப்பதற்கு கடமைப்பட்டுள்ளோம்.

அனைத்து NAPP பணியாளர்கள், சிறு உற்பத்தியாளர்கள் மற்றும் தொழிலாளர்களின் அமைப்புகள், எங்கள் இயக்குநர்கள் குழு மற்றும் அதன் கமிஷன்கள் மற்றும் NAPP ஆல் தற்காலிகமாக ஒப்பந்தம் செய்யப்பட்ட வேறு எந்த நபர்களும் எங்களுடனான அவர்களின்

உறவின் அடிப்படையாக அவர்கள் அறிவித்ததபடி குழந்தைகள் மற்றும் பாதிக்கப்படக்கூடிய வயதுவந்தோர்களின் சிறந்த நலன்களுக்கு காரணியாக இருக்க வேண்டும் என்று NAPP எதிர்பார்க்கிறது.

குழந்தைகள் மற்றும் பாதிக்கப்படக்கூடிய வயதுவந்தோர்களைப் பாதுகாப்பதற்கான இந்தக் கொள்கை எல்லாவற்றிற்கும் மேலாக அவர்களின் உரிமைகளை அங்கீகரிக்கும் எங்கள் நிலைப்பாட்டை அடிப்படையாகக் கொண்டது, மேலும் எங்கள் நடவடிக்கைகள் குழந்தைகளின் உரிமைகள் தொடர்பான ஐக்கிய நாடுகளின் மாநாட்டின் கோட்பாடுகள், ஐ.நா மனித உரிமைகள் பிரகடனம் மற்றும் முக்கியமாக குழந்தைகள் மற்றும் பாதிக்கப்படக்கூடிய வயதுவந்தோர்களின் பாதுகாப்பு தொடர்பான கட்டுரைகள் ஆகியவற்றிற்கு ஏற்ப உள்ளன என்பதை உத்தரவாதப்படுத்த நாங்கள் கடமைப்பட்டுள்ளோம்.

தீங்கு விளைவிக்கக் கூடிய, தவறாகப் பயன்படுத்துதல் அல்லது சுரண்டலுக்கு எதிராக குழந்தைகள் மற்றும் பாதிக்கப்படக்கூடிய பெரியவர்கIIN உரிமைகளைப் பாதுகாக்க நாங்கள் செயல்படுவோம் என்று உத்தரவாதம் அளிக்க, NAPP நடவடிக்கைகளை தீவிரமாக மேற்கொள்ளும்.

**B. வரையறைகள்: குழந்தை:**18 வயதுக்குட்பட்ட எந்தவொரு நபரும்.

***குழந்தை தொழிலாளர்:***

"குழந்தைத் தொழிலாளர்" என்பதற்கான உலகளாவிய வரையறை எதுவும் இல்லை. ஆனால், குழந்தைத் தொழிலாளர் முறை குறித்து வரையறை செய்யும் முதன்மை சர்வதேச மற்றும் சட்டக் கருவிகள், சம்பந்தப்பட்ட சர்வதேச தொழிலாளர் அமைப்பு (ILO) மாநாடுகளும், சிறார் உரிமைகள் தொடர்பான ஐநா மாநாடும் (CRC) ஆகும்.

ஐ.எல்.ஓ கருத்துப்படி, குழந்தைத் தொழிலாளர் என்பது பின்வரும் வேலைகளைக் குறிக்கிறது:

- மனநலம், உடல்ரீதியாக, சமூகரீதியாக அல்லது அறநெறி ரீதியாக அபாயகரமானது, சுரண்டக்கூடியது மற்றும் குழந்தைகளுக்கு தீங்கு விளைவிப்பவை; மற்றும்
- இதன் மூலம் குழந்தைகளின் பள்ளிப்படிப்பில் தலையிடுவது:
    - பள்ளிக்குச் செல்லும் வாய்ப்பை இழக்கச் செய்தல்;
    - முன்கூட்டியே பள்ளியை விட்டு வெளியேற அவர்களை கட்டாயப்படுத்துதல்; அல்லது
    - பள்ளிக்குச் செல்வதுடன் கூடவே அதிகப்படியான நீண்ட மற்றும் கனமான வேலைகளை அவர்களுக்கு அளித்தல்

ஒரு வேலை ஆபத்தான வேலை என கருதப்படுகிறது ஏனென்றால், அதன் தன்மை அல்லது வேலை செய்யப்படும் இடத்தில் நிலவும் சூழ்நிலைகள் காரணமாகவோ, அது வேலை செய்வதற்கான குறைந்தபட்ச வயதுக்கு மேல் உள்ள வளர் இளம் பருவத்தினர் அல்லது

குழந்தைகளின் உடல், மன அல்லது ஒழுக்க ரீதியான நல்வாழ்வுக்கு ஆபத்தை விளைவிக்கிறது

அடிமைத்தனம், ஆள் கடத்தல், கடனுக்காக கொத்தடிமையாகுதல் அல்லது கட்டாய வேலைசெய்யவைப்பதன் பிற வடிவங்கள், ஆயுத பூசல்கள், வணிக ரீதியான பாலியல் சுரண்டல் மற்றும் ஆபாசப் படங்கள் அல்லது சட்டவிரோத செயல்களில் பயன்படுத்துவதற்கு குழந்தைகளை கட்டாயமாக ஆட்சேர்ப்பு செய்வது போன்றவை சர்வதேச அளவில் வரையறுக்கப்பட்ட குழந்தைத் தொழிலாளர்களின் கேள்விக்கிடமின்றி மோசமான வடிவங்களாகும்.

***குழந்தைகள் பாதுகாப்பு:***

குழந்தைகளின் பாதுகாப்பை மிக மோசமான தொழில், வன்முறை, சுரண்டல், துஷ்பிரயோகம் மற்றும் புறக்கணிப்பு ஆகியவற்றிலிருந்து குழந்தைகளைப் பாதுகாக்க எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் என்றும், அதே நேரத்தில் குழந்தைகளின் நல்வாழ்வு மற்றும் வளர்ச்சிக்கு ஆதரவளிப்பதாகவும் NAPP இல் வரையறுக்கிறோம்.

***குழந்தை நல்வாழ்வு மற்றும் வளர்ச்சி:***

குழந்தைகள், திறன்களையும் அறிவையும் வளர்த்துக் கொண்டு, உற்பத்தித் திறனுள்ள பெரியவர்கள் மற்றும் சுறுசுறுப்பான குடிமக்கள் ஆவதற்கு தங்களை மேம்படுத்துகிறார்கள்.மேலும் அவர்கள் நல்வாழ்வின் சாதகமான சூழ்நிலையில் அவர்கள் அவ்வாறு செய்கிறார்கள். திறன்கள் மற்றும் அறிவைப் பெறுவது, முறையான/தொழில்முறைக் கல்வியின் மூலமும், விளையாட்டு உட்பட வேலை மற்றும் வாழ்க்கை அனுபவங்கள் மூலமாகவும் நிகழ்கிறது.

***கட்டாயத் தொழிலாளர்:***

கட்டாய தொழிலாளர் என்பது, அச்சுறுத்தல் அல்லது அபராதத்தின்கீழ் ஒரு நபரிடம் இருந்து வேலை அல்லது சேவையை வாங்குவது அல்லது அதை அந்த நபர் தானாக முன்வந்து சுயவிருப்பத்தின்படி வழங்கவில்லை என்பதாகும், அத்துடன் அடிமைத்தனம் மற்றும் ஆட்கடத்தல், பொது மற்றும் சிறை வேலைகளை தவறாகப் பயன்படுத்துதல், கட்டாய ஆட்சேர்ப்பு, கடன் கொத்தடிமை மற்றும் வீட்டுத் தொழிலாளர்கள் கட்டாய தொழிலாளர் சூழ்நிலைகளின் கீழ் வேலை செய்வது , மற்றும் தொழிலாளர் அல்லது பாலியல் நோக்கங்களுக்காக தேசிய அல்லது சர்வதேச மனித கடத்தல், இதில் அடிமைத்தனம் மற்றும் அடிமைத்தனத்தை ஒத்த நடைமுறைகள் ஆகியவையும் அடங்கும். கட்டாய தொழிலாளரின் ஐ.எல்.ஓ வரையறைகளில் நிபந்தனையில்லாத மோசமான குழந்தைத் தொழிலாளர் வடிவங்கள் (ILO 182 இல் குறிப்பிட்டபடி) அடங்கும்.

***பாதிக்கப்படக்கூடிய வயதுவந்தோர்:***

18 வயதிற்கு மேற்பட்டவர், குறிப்பாக கட்டாய தொழிலாளர் நடைமுறைகளிலிருந்து, கணிசமான அளவு தீங்கு அல்லது கடுமையான சுரண்டலுக்கு எதிராக தன்னை பாதுகாத்துக் கொள்ள இயலாதவர்,

**C: கொள்கை நோக்கம்:**

இந்தக் கொள்கை அனைத்து NAPP பணியாளர்களுக்கும், NAPP இயக்குநர்கள் குழு மற்றும் அதன் கமிட்டிகளுக்கும் பொருந்தும். நிறுவனத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் மற்றும் / அல்லது நிறுவனத்தால் ஒப்பந்தம் செய்யப்பட்ட அனைத்து நபர்களும் மற்றும் குறிப்பாக NAPP க்காக பணிபுரியும் போது அல்லது அலுவலக ரீதியாக பயணிக்கும்போது குழந்தைகளுடன் தொடர்புகொள்பவர்கள் பின்பற்ற வேண்டிய பொறுப்புகளையும் மற்றும் நடைமுறைகளையும் இது விளக்குகிறது,

மேலும், NAPP தேசிய நெட்வொர்க்குகள் மற்றும் சிறு உற்பத்தியாளர்களின் அமைப்புகள் மற்றும் தொழிலாளர்களின் அமைப்புகளை இந்த கொள்கையின் பயன்பாட்டை தங்கள் சொந்த கட்டமைப்புகளுக்குள் ஊக்குவிக்க அழைக்கிறது மற்றும் / அல்லது இந்த NAPP பொதுக் கொள்கையின் அடிப்படையில் அவர்களின் சொந்த கொள்கைகள் மற்றும் நடைமுறைகளை மேம்படுத்துகிறது.

**D. அறிவிப்பு:**

**குழந்தைகள் மற்றும் பாதிக்கப்படக்கூடிய வயதுவந்தோர்களின் நல்வாழ்வுக்கு ஆதரவாக NAPP தடுப்பு நடவடிக்கைகளை எடுக்க உத்தரவாதமளிக்கிறது**, மற்றும் தேவைப்படும் போது, இந்த கண்டத்தில் (ஆசியா மற்றும் பசிபிக்) நியாயமான வர்த்தக உற்பத்தியின் பின்னணியில் தன்னை முன்னிறுத்திக் கொள்ளும் குழந்தைத் தொழிலாளரின் மோசமான வடிவங்கள் அல்லது கட்டாய தொழிலாளர் உட்பட, துஷ்பிரயோகம் அல்லது சுரண்டல் ஆகிய ஒவ்வொரு விஷயத்திலும் நீடித்த பாதுகாப்புக்கு வழிவகுக்கும் ஆதரவை வழங்கவும்.

இந்த நடவடிக்கைகளால், குழந்தைகள், இளம் பருவத்தினர் மற்றும் பாதிக்கப்படக்கூடிய வயதுவந்தோர் எந்தவொரு தீங்குகளிலிருந்தும் தீவிரமாகப் பாதுகாக்கவும், குழந்தைகள் மற்றும் பாதிக்கப்படக்கூடிய வயதுவந்தோர்கள் ஆகியோரின் உரிமைகளை முழுமையாகப் பாதுகாக்க ஊக்குவிக்கவும் NAPP முயல்கிறது. குழந்தைகளுக்கும் பாதிக்கப்படக்கூடிய வயதுவந்தோர்களுக்கும், பாதுகாக்கவும், எந்த வகையான துன்புறுத்தல், தவறாகப் பயன்படுத்துதல், சுரண்டுதல் போன்ற அனைத்து வடிவங்களிலும் இருந்து அவர்களைப் பாதுகாக்க நடவடிக்கை எடுக்கவும் எங்கள் பொறுப்பை நாங்கள் தீவிரமாக எடுத்துக் கொள்கிறோம். மேலும், முறைகேடுகளையோ, சுரண்டலையோ புகார் தெரிவிக்கும் குழந்தைகளையும், வயதுவந்தோர்களையும் பாதுகாக்க நடவடிக்கை எடுக்கிறோம் என உறுதியளிக்கிறோம்

இந்த நடைமுறைகள் முதன்மையாக பின்வருவனவற்றில் கவனம் செலுத்தப்படும்:

- NAPP இன் பணியாளர்கள், இயக்குநர்கள் குழு, தேசிய நெட்வொர்க்குகள், தயாரிப்பாளர்கள் மற்றும் தொழிலாளர்களின் அமைப்புகள், Fairtrade உற்பத்தியின் செல்வாக்கின் கீழ் உள்ள சமூகங்கள் (சாத்தியமான போது), தன்னார்வலர்கள் மற்றும் அமைப்பைப் பிரதிநிதித்துவப்படுத்தும் வேறு எந்த நபருக்கும் பயிற்சி. இந்த பயிற்சி குழந்தைத் தொழிலாளர்களின் வரையறை, குழந்தைத் தொழிலாளர் மற்றும் கட்டாய தொழிலாளர் ஆகியவற்றின் மோசமான வடிவங்கள் மற்றும் அது சம்பந்தமான Fairtrade தரநிலைகளின் பகுதியுடன் இணங்குதல் உள்ளிட்டவற்றில் கவனம் செலுத்தப்படும்.
- குழந்தைகளின் வளர்ச்சி, பாதிக்கப்படக்கூடிய வயதுவந்தோர்களின் நல்வாழ்வு மற்றும் தலைமுறை மாற்றீடு ஆகியவற்றை மையமாகக் கொண்ட திட்டங்களை செயல்படுத்துவதில் உறுப்பினர் அமைப்புகளுக்கு உதவி.
- பாலினம் சார்ந்த வன்முறை குற்றச்சாட்டுகள் அல்லது சம்பவங்கள் உட்பட, குழந்தை மற்றும் கட்டாய தொழிலாளர்களை அடையாளம் காணுதல் மற்றும் பதிலளிப்பதில் தயாரிப்பாளர் அமைப்புகளுக்கு உதவி
- Fairtrade International அல்லது பிற நிபுணர்களால் உருவாக்கப்பட்ட இளைஞர்களை உள்ளடக்கிய, சமூக அடிப்படையிலான கண்காணிப்பு மற்றும் தீர்வு முறைகளை நிறுவுவதில் ஆர்வமுள்ள உறுப்பினர் அமைப்புகளுக்கு தொழில்நுட்ப உதவி.
- குழந்தைகள் மற்றும் பாதிக்கப்படக்கூடிய வயதுவந்தோர்களைப் பாதுகாப்பதில் நிபுணத்துவம் வாய்ந்த ஏஜென்சிகளுடன் கூட்டணிகளை உருவாக்குதல், அது குழந்தை உரிமைகள் பற்றிய ஐ. நா. மாநாட்டின் அடிப்படையிலும், ILO 138 மற்றும் ILO 182 மீதான மரியாதையை ஊக்குவிப்பதாகவும் உள்ளது, மேலும், ஒரு தெளிவான சாட்சியத்துடன் ஒரு வழக்கு வரும்போது எங்களுக்கு ஆலோசனை வழங்கவும் மற்றும் அவர்களுக்கு ஆதரவு அளிக்க வேண்டும் என்பதற்காக, கட்டாய தொழிலாளர் மற்றும் பாரபட்சத்தின் மீது 111 உட்பட, ILO மரபுகளின் அடிப்படையில் 29 மற்றும் 105. , குழந்தை அல்லது கட்டாய தொழிலாளர் அல்லது பாலின அடிப்படையிலான வன்முறையை எதிர்கொள்ளும் நபர்களுக்கு மேலும் தீங்கு விளைவிக்கக் கூடாது என்பதை உறுதிப்படுத்த தொடர்புடைய பாதுகாப்பு அதிகாரிகள் அல்லது நிபுணர் அமைப்புகளுக்கு தகவல் அளிக்க வேண்டும்.
- நியாயமான வர்த்தக உற்பத்தி அல்லது பதனிடல் பகுதிக்குள், குழந்தைகள் அல்லது பாதிக்கப்படக்கூடிய வயதுவந்தோர்களை துஷ்பிரயோகம் செய்தல் அல்லது சுரண்டுவது போன்றவை எங்களுக்கு தெரியவரும்போது, உயர்மட்ட இரகசியத்தன்மை க்கு உறுதியளித்து

அதனுடன் தொடர்புடைய தேசிய பாதுகாப்பு நிறுவனங்கள் மற்றும் அதிகாரிகளுக்கு தெரிவிக்க நாங்கள் உறுதியளிக்கிறோம். எங்கள் முடிவுகளும் செயல்களும் "குழந்தைகள் அல்லது பாதிக்கப்படக்கூடிய வயதுவந்தோர்களின் சிறந்த நலன்களுக்காக" என்ற கொள்கையால் வழிநடத்தப்படும், அதே நேரத்தில் அவர்களின் ஒருமைப்பாட்டை எப்போதும் பாதுகாக்கும்.

### E: செயல்முறைகள்:

பின்வரும் செயல்றைகளின் நோக்கம் என்னவென்றால் ,NAPP பணியாளர்கள் மற்றும் NAPP இயக்குநர்கள் குழு, ஆணையங்கள் மற்றும் நபர்கள் மற்றும் / அல்லது நிறுவனங்கள் பிரதிநிதித்துவப்படுத்தும் மற்றும் / அல்லது நிறுவனத்துடன் இணைக்கப்பட்டுள்ளவை:

- மனித உரிமைகளின் கண்ணோட்டத்தில் இருந்து, அடிமைத்தனம், குழந்தை கடத்தல், கடன் அடிமைத்தனம் போன்ற கட்டாய தொழிலாளரின் மோசமான வடிவங்கள், ஆயுத மோதல்களில் பயன்படுத்துவது, வணிக ரீதியான பாலியல் சுரண்டல், ஆபாசப்படங்கள், சட்டவிரோத நடவடிக்கைகள் ஆகியவற்றில் பயன்படுத்தப்பட வேண்டி குழந்தைகள் மற்றும் பாதிப்புக்குள்ளாகக்கூடிய வயதுவந்தோர்களை கட்டாயப்படுத்தி ஆட்சேர்ப்பது, போன்றவைகளைப் புரிந்துக்கொள்வது.

- குழந்தைகள் மற்றும் பாதிக்கப்படக்கூடிய வயதுவந்தோர்களின் பாதுகாப்புக்கான எதிர்பார்ப்புகளை தெளிவாகப் புரிந்துகொள்ளுதல் மற்றும் **பின்னிணைப்பு A** இல் விவரிக்கப்பட்டுள்ளபடி,NAPP இன் நடத்தை விதிக்கு மதிப்பளிப்பது.

- குழந்தைகளைப் பாதுகாப்பதற்கான NAPP இன் கொள்கை மற்றும் நடைமுறைகளைப் புரிந்துகொண்டு பாதிக்கப்படக்கூடிய வயதுவந்தோர்கள், மற்றும் இணைப்பு B இல் வழங்கப்பட்டுள்ள ஒரு குறிப்பிட்ட படிவத்தில் யொப்பமிட்டு உறுதிப்படுத்துவது.

- இந்த வழக்குகளை எங்கே பாதுகாப்பாக அறிக்கையிட வேண்டும், வன்முறை, சுரண்டல் மற்றும் துஷ்பிரயோகங்கள், மற்றும் ஒரு தனிநபராக பின்பற்ற வேண்டிய நடவடிக்கைகள், குழந்தைகள் மற்றும் பாதிக்கப்படக்கூடிய பெரியவர்களை பாதுகாப்பதற்கு பாதுகாப்பான நடவடிக்கைகளை எடுப்பது போன்றவற்றை புரிந்துக்கொள்வது

  இந்த புரிந்துணர்களுடன், NAPP இன் பணியாளர்கள் மற்றும் இயக்குநர்கள் குழு மற்றும் ஆணையங்கள்:

- எந்தவொரு வழக்கிற்கும் நம்பகத்தன்மை வாய்ந்ததாக இருந்தால், உடனடியாக தலைமை நிர்வாக அதிகாரி அல்லது அவள் / அவரது செயல்படுத்துபவருக்கு புகாரளிக்கவும்,NAPP இன் பொருத்தமான செயல்முறைகளின்படி, பின்னிணைப்பு C இல் வழங்கப்பட்டுள்ள அறிக்கை படிவத்தைப் பயன்படுத்தி, குழந்தைகள் அல்லது பாதிக்கப்படக்கூடிய வயதுவந்தோர்களை

துஷ்பிரயோகம் செய்வது அல்லது சுரண்டுவது தொடர்பாக அறிவு உள்ளது. குற்றச்சாட்டுகள் மற்றும் வழக்குகள் குறித்து NAPP நாற்காலிக்கு அறிவிக்கப்படும் மற்றும் தலைமை நிர்வாக அதிகாரி மற்றும் அவள் / அவருடன் பணிபுரியும் செயல்படுத்துபவர்கள் பாதிக்கப்பட்ட குழந்தை அல்லது பாதிக்கப்படக்கூடிய வயதுவந்தோரைப் பாதுகாக்க பரிந்துரைக்கப்பட்ட ஒட்டுமொத்த நடவடிக்கைகள் குறித்து முடிவெடுப்பது. குழந்தைகள் மற்றும் பாதிக்கப்படக்கூடிய வயதுவந்தோர்கள் ஆகியோரின் உரிமைகள் தொடர்பாக நிபுணத்துவம் பெற்ற நிறுவனங்கள், குழந்தை அல்லது பாதிக்கப்படக்கூடிய வயதுவந்தோர்கள் ஆகியோரின் சிறந்த நலன்களை அடிப்படையாகக் கொண்டு நடவடிக்கை எடுக்கும் முடிவை நிறைவேற்றும் பொறுப்பு தலைமை நிர்வாக அதிகாரி அல்லது அவரது செயல்படுத்துபவரின் பொறுப்பில் உள்ளது.. குழந்தைகள் மற்றும் பாதிப்படையக்கூடிய வயதுவந்தோர்களின் நீண்டகால நல்வாழ்வுக்காக, குழந்தைகள் மற்றும் பாதிக்கப்படக்கூடிய வயதுவந்தோர்களின் தேசிய பாதுகாப்புக்கு பொறுப்பான ஒரு பாதுகாப்பு நிறுவனம் அல்லது முகவருக்கு வழக்கை நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ புகாரளிப்பதை இது குறிக்கலாம்,

- NAPP இன் பொருந்தக்கூடிய செயல்முறைகளின்படி, ஒரு குழந்தை அல்லது ஒரு வயதுவந்தோரை தவறாகப் பயன்படுத்துதல் அல்லது சுரண்டுவது பற்றிய நம்பகத்தன்மை வாய்ந்த அறிதலுக்குப் பதிலளிக்கவும், மற்றும் வழக்கைப் புகாரளிக்க வழிவகுக்கும் நடவடிக்கைகளைத் தொடரவும், அதே நேரத்தில் குழந்தைகள் மற்றும் பாதிப்படையக்கூடிய வயதுவந்தோர்களின் சிறந்த நலன்களை எப்போதும் மதிக்கவும், மேலும் நமது செயல்களின் மூலம் அவர்களுக்கு மேலும் தீங்கு விளைவிக்காமல் இருப்பதை உறுதி செய்தல்.

- NAPP இன் தலைமை நிர்வாக அதிகாரி அல்லது அவரது நியமிக்கவர்களால் கோரும்போது போது, குழந்தைகள் அல்லது பாதிப்புக்குள்ளாகக்கூடிய வயதுவந்தோர் மீதான துஷ்பிரயோகங்கள் அல்லது சுரண்டல்கள் தொடர்பான எந்தவொரு விசாரணைக்கும் முழுமையாக மற்றும் ரகசியமான ஒத்துழைப்பை நல்குதல். தலைமை நிர்வாக அதிகாரி அல்லது அவரது நியமிக்கப்பட்டவர்களால் குறிப்பிட்ட கோரிக்கை பெறாமலேயே, எந்த ஒரு தனிப்பட்ட (பணியாளர், பணியமர்த்தப்பட்ட பணியாளர் அல்லது NAPP இன் பிரதிநிதி) ஒரு விசாரணையை நடத்தவோ அல்லது கூடுதல் தகவல்களை உருவாக்கவோ முடியாது.

- குறிப்பாக குழந்தைகள் தங்கள் கவலைகளையும் உரிமைகளையும் பற்றி பேச ஊக்குவிக்க ஏற்ற ஒரு சூழலை உருவாக்குவதில் பங்களிப்பது.

- குழந்தைகளின் புகைப்படங்கள் அல்லது வீடியோ எடுப்பதற்கு முன் அல்லது அவர்களை நேர்காணல் செய்வதற்கு முன்பு எப்போதும் குழந்தைகளிடம் அனுமதி கோர வேண்டும். (பெற்றோரிடம் அல்லது பாதுகாவலர்களிடம் அங்கீகாரத்தில் கையெழுத்திடுமாறு கேளுங்கள்). இந்த சாத்தியக்கூறுகளில் ஏதேனும் ஒன்றுக்கு “இல்லை” என்று அவர்கள்

கூறும்போது அவர்களின் முடிவை மதிக்கவும். குழந்தைகளின் கதைகள் மற்றும் படங்கள் அவர்களின் சிறந்த நலன்களின் அடிப்படையில் இருக்க வேண்டும். பாலின அடிப்படையிலான வன்முறை உட்பட குழந்தை அல்லது கட்டாய தொழிலாளரில் உள்ள குழந்தை அல்லது பாதிக்கப்படக்கூடிய வயதுவந்தோர் ஆகியோர் புகைப்படம் எடுக்கப்பட மாட்டார்கள்; புகைப்படம் எடுப்பதற்கான அவர்களின் ஒப்புதல் செல்லுபடியாகாததாகக் கருதப்படும், ஏனெனில் அவர்களது பலவீனமான சூழ்நிலை சம்மதத்தை அனுமதிக்காது. எல்லா விஷயங்களிலும் பாதுகாப்புக்கே முன்னுரிமைஅளிக்கப்படும்.

- குழந்தைகள் அல்லது பாதிக்கப்பட்ட பெரியவர்களின் பாதுகாப்பு, மற்றும்/அல்லது இந்த பாதுகாப்புக் கொள்கைக்கு இணங்காத பட்சத்தில், NAPP பணியாளர்கள், NAPP இன் இயக்குநர்கள் குழு அல்லது குழுக்கள் அல்லது அமைப்பை பிரதிநிதித்துவப்படுத்தும் வேறு எந்த நபரின் நடத்தை பற்றிய தகவல்கள் இருந்தால் அது NAPPA ஆல் பயிற்றுவிக்கப்பட்ட தலைமை நிர்வாக அதிகாரி அல்லது நியமிக்கப் பட்ட, மற்றும்/அல்லது சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம், பாதுகாப்பாக புகாரளிக்கப்பட்டு விசாரணை மேற்கொள்ளப்படும் மற்றும் / அல்லது சட்டத்தின் படி விசாரணைக்கு தொடர்புடைய அதிகாரிகளிடம் தாக்கல் செய்யப்பட்ட புகார் மூலம் விசாரணை மேற்கொள்ளப்படும். தலைமை நிர்வாக அதிகாரி அல்லது அவர் நியமித்தவருக்கு எதிராக ஒரு குற்றச்சாட்டு அல்லது அறிக்கை செய்யப்பட வேண்டுமானால், அவர்களுக்கு அடுத்தமட்ட மேலாண்மை மற்றும் / அல்லது NAPP வாரியத்தின் தலைவர் ஆகியோருக்கு புகாரளிப்பதன் மூலம் மோதல்கள் தவிர்க்கப்படும்.

- குழந்தைகள் மற்றும் பாதிக்கப்படக்கூடிய வயதுவந்தோர்களுக்கான பாதுகாப்புக் கொள்கையில் இந்த நடைமுறைகளைப் பற்றி நன்கு அறிந்திருக்கவேண்டும், மேலும் குழந்தைத் தொழிலாளர் மற்றும் கட்டாய தொழிலாளர் தொடர்பான குறிப்பாக, தற்போதைய கொள்கையில் சுட்டிக்காட்டியது போல, குழந்தை/ பாதிப்புக்குள்ளாகக்கூடிய வயதுவந்தோரின் பாதுகாப்பு கண்ணோட்டத்தில் இருந்து பதில் தேவைப்படும் விஷயங்களில். Fairtrade தரநிலையைப் பற்றிய தெளிவான அறிவைக் கொண்டிருக்கவேண்டும்.

## F: தொடர்பு நடைமுறைகள்:

- குழந்தைகள் மற்றும் பாதிக்கப்படக்கூடிய வயதுவந்தோர்களுக்கான பாதுகாப்பு என்ற தலைப்பில் சம்பந்தப்பட்ட அனைத்து தகவல்களும் NAPP இன் சிறப்புரிமை பெற்ற தகவல்களாகும், இந்த தகவலின் உள் மற்றும் வெளிப்புற தகவல்தொடர்புகள், நிறுவனத்தின் சட்டபூர்வ பிரதிநிதி முக்கியம் என கருதப்பட்டபடி, பணியாளர்கள் மற்றும்/அல்லது NAPP இன் கீழ் செயல்படும் நபர்கள் ரகசியத்தன்மை தொடர்பான கூடுதல் ஒப்பந்தங்களில் கையெழுத்திட உட்படுத்தும் கடுமையான நடைமுறைகளை பின்பற்றுகிறது. இது ஒவ்வொரு வழக்குகளின் தன்மையின் அடிப்படையில் முடிவு செய்யப்படும்.

- குழந்தைகள் மற்றும் பாதிப்புக்குள்ளாகும் வயதுவந்தோர்களுக்கான பாதுகாப்பு என்ற தலைப்பில் உள்ள அனைத்துத் தகவல்களும் உணர்வுபூர்வமானவைகள், இந்தத் தகவலைப் பேசும்போது தகுந்த முன்னெச்சரிக்கைகள் எடுக்கப்படுகின்றன. குறிப்பிட்ட பெறுனர்கள் மட்டுமே அத்தகைய தகவல்களைப் பெறுகிறார்கள் மற்றும் அத்தகையதை அணுகுகிறார்கள் என்பதை உறுதி செய்வது குழந்தைகளது பாதுகாப்புடன் தொடர்புடைய தகவல் வழங்குநர்கள் மற்றும் பெறுநர் ஆகிய இருவரின் பொறுப்பாகும், எனவே, இந்த விஷயத்தில் நடைபெறும் எந்த ஒரு மின்னஞ்சல் தகவல் தொடர்பும் "பொருள்" கட்டத்தில், செய்தி கட்டத்தில் மற்றும் இணைக்கப்பட்ட ஆவணங்களில் “இரகசியமானது” என முத்திரையிடப்பட வேண்டும்,

- குழந்தைகள் அல்லது பாதிக்கப்படக்கூடிய வயதுவந்தோர்களைப் பாதுகாப்பதற்கான தகவல் அல்லது நடவடிக்கையை மற்றொரு நிறுவனம் அல்லது தனிநபருக்கு வெளிப்படுத்தப்படுத்தவோ, இந்த தகவல்களை வெளியிடுபவர் அல்லது எடுக்கக்கூடிய நடவடிக்கைகளை தீர்மானிக்கக்கூடியவர் அவ்வாறு செய்வதில் குழந்தை அல்லது பாதிக்கப்பட்ட வயதுவந்தோரின் சிறந்த நலன்கள் அடையப்படும் அல்லது பராமரிக்கப்படும் என நம்பினாலும் எந்த நேரத்திலும் ஒரு நபர் தன்சுயமாக தீர்மானிக்க முடியாது,

- பாதுகாப்பு குறித்த சிறப்புரிமைப்பெற்ற தகவல்களைக் கொண்ட எந்தவொரு நபரும் முதலில் அத்தகைய தகவல்களை Fairtrade அமைப்புக்குள் இருக்கும் நிறுவனம் அல்லது வெளியே இருக்கும் ஒரு நிறுவனத்துடன் பகிர வேண்டும் என்னும் அவரது/அவளது விருப்பத்தை முதலில் NAPP இன் தலைமை நிர்வாக அதிகாரி அல்லது அவள் / அவரது நியமிக்கப்பட்டவர்களுடன் இது பற்றி விவாதிக்க வேண்டும்.

- NAPP இன் தலைமை நிர்வாக அதிகாரி அல்லது அவள் / அவரது நியமிப்பாளர்கள் பாலின அடிப்படையிலான வன்முறை உள்ளிட்ட குழந்தைத் தொழிலாளர்கள் அல்லது கட்டாய தொழிலாளர்களின் மோசமான வடிவங்கள் குறித்து ஒரு குற்றச்சாட்டு அல்லது தகவலைப் பெறும்போது, அவர் / அவள் இந்த வழக்கை 15 வேலை நாட்களுக்குள் புகாரளிக்க தேவையான நடவடிக்கை எடுக்க கடமைப்பட்டுள்ளார்.

**இந்த தரநிலைகளை அங்கீகரிப்பவர்கள்:**
NAPP இன் பொதுக்கூட்டத்தின் சரிபார்ப்பிற்கான அட்டவணையில் பொறுப்புக்கொண்ட NAPP இன் இயக்குநர்கள் குழு.

Network of Asia and Pacific Producers – வாரியத் தலைவர்
திரு. ஞானசேகரன் ராஜரத்தினம்

FAIRTRADE
NETWORK OF ASIA & PACIFIC PRODUCERS

## பின்னிணைப்பு A

## <u>குழந்தைகள் மற்றும் பாதிக்கப்படக்கூடிய வயதுவந்தோர்களின் பாதுகாப்புக்கான NAPP இன் நடத்தை விதிமுறைகள்</u>

நான்,_______________________________[பெயரைச் சொருகவும்], நான் NAPP இன் பாதுகாப்புக் கொள்கையைப் படித்து புரிந்து கொண்டேன் என்பதை ஒப்புக்கொள்கிறேன், மேலும் NAPP உடனான எனது தொடர்பின் போது, நான் கண்டிப்பாக:

> இனம், நிறம், பாலினம், மொழி, மதம், அரசியல் அல்லது பிற கருத்து, தேசிய, இன அல்லது சமூக தோற்றம், சொத்து, இயலாமை, பிறப்பு அல்லது பிற அந்தஸ்தைப் பொருட்படுத்தாமல் குழந்தைகள் மற்றும் / அல்லது பாதிக்கப்படக்கூடிய வயதுவந்தோர்களை மரியாதையுடன் நடத்தவேண்டும்.

> தகாத, துன்புறுத்தும், இழிவாக திட்டுகிற , பாலியல் தூண்டும், இழிவான அல்லது கலாச்சார பொருத்தமற்ற மொழி அல்லது நடத்தையை குழந்தைகள் அல்லது வயதுவந்தோரிடம் பயன்படுத்த கூடாது.

> 18 வயதிற்கு உட்பட்ட குழந்தைகளை பாலியல் சேவைகள் அல்லது செயல்களுக்கு பணம் செலுத்துதல் உட்பட எந்தவொரு பாலியல் உடலுறவு அல்லது பாலியல் செயல்பாடுகளிலும் ஈடுபடக்கூடாது,

> NAPP, தயாரிப்பாளர் அமைப்புகள் அல்லது கூட்டாளர் அமைப்புகளில் பணிபுரியும் 18 வயதுக்கு மேற்பட்ட எந்தவொரு நபருடனும் எந்தவிதமான பாலியல் துன்புறுத்தல் அல்லது தொடர்புடைய தவறான நடத்தைகளில் ஈடுபடக்கூடாது.

> சாத்தியமான இடங்களில், குழந்தைகள் அல்லது பாதிக்கப்படக்கூடிய வயதுவந்தோர்களின் அருகாமையில் பணிபுரியும் போது மற்றொரு வயது வந்தவர் இருப்பதை உறுதிசெய்க,

> , ஆதரவற்ற குழந்தைகளுக்கு உடனடியாக காயம் அல்லது உடல் சார்ந்த அச்சுறுத்தல் ஏற்படும் அபாயம் இருந்தாலொழிய, அவர்ளை எனது வீட்டிற்கு அழைக்க வேண்டாம் இந்த விஷயத்தில் ஒரு மேற்பார்வையாளரிடமிருந்து அனுமதி பெற வேண்டும் மற்றும் மற்றொரு வயதுவந்தோர் உடனிருக்க வேண்டும்.

> மேற்பார்வை செய்யப்படாத குழந்தைகளுக்கு அருகில் தூங்கக்கூடாது.

> எந்தவொரு கணினிகள், மொபைல் போன்கள், வீடியோ கேமராக்கள், கேமராக்கள் அல்லது சமூக ஊடகங்களை சரியான முறையில் பயன்படுத்தவும், குழந்தைகள் அல்லது பாதிக்கப்படக்கூடிய வயதுவந்தோர்களை ஒருபோதும் சுரண்டவோ துன்புறுத்தவோ, எந்தவொரு ஊடகம் மூலமாகவும் சுரண்டல் பொருள்களை அணுகவோக் கூடாது,

> குழந்தைகள் மீது உடல் ரீதியான தண்டனையைப் பயன்படுத்த வேண்டாம்

> தங்கள் வயது அல்லது வளர்ச்சி நிலைக்கு பொருத்தமற்ற, கல்வி மற்றும் பொழுதுபோக்கு நடவடிக்கைகளுக்கான அவர்களின் நேரத்திற்கு இடையூறு விளைவிக்கிற அல்லது அவர்களுக்கு கணிசமான காயத்தை ஏற்படுத்தக்கூடிய வீட்டு அல்லது பிற தொழிலுக்கு குழந்தைகளை வேலைக்கு அமர்த்தக்கூடாது,

> குழந்தை மற்றும் கட்டாயத் தொழிலாளர் தொடர்பான தொழிலாளர் சட்டங்கள் மற்றும் பாலின அடிப்படையிலான வன்முறை உள்ளிட்ட அனைத்து தொடர்புடைய உள்ளூர் சட்டங்களுக்கும் இணங்கி நடக்க வேண்டும்..

> >NAPP இன் பாதுகாப்புக் கொள்கையில் கூறப்படுவது போல, தகுந்த செயல்முறைகளுக்கு உட்பட்டு, சுரண்டல் மற்றும் துஷ்பிரயோகம் மற்றும் கொள்கை இணக்கத்தன்மை பற்றிய அக்கறைகள் அல்லது குற்றச்சாட்டுகளை உடனடியாக புகாரளிக்க வேண்டும்

> சுரண்டல் மற்றும் துஷ்பிரயோகம் தொடர்பான NAPP உடனான எனது தொடர்பிற்கு முன்னர் நிகழ்ந்த அல்லது அதற்கு பின் நிகழ்ந்த ஒரு குற்றத்தின் அனைத்து குற்றச்சாட்டுகள், குற்றத்தீர்ப்புகள் மற்றும் பிற விளைவுகளை உடனடியாக வெளிப்படுத்த வேண்டும்

இந்த நடத்தை விதிமுறைகளை மீறுவோர், தகுந்த செயல்முறைகளுக்கு உட்பட்டு உடனடியாக தெரிவிக்கப்பட வேண்டும், மேலும் நாப்கின் மூலம் வேலை நிறுத்தம் அல்லது பணி நீக்கம் செய்யப்படலாம் என்பதை நான் புரிந்துகொண்டேன்.

கையொப்பமிட்டது: தேதியிட்டது: **17வது ஜனவரி 2020**

**வாரியத் தலைவர்:** திரு ஞானசேகரன் ராஜரத்தினம்

**தலைமை செயல்பாட்டு அதிகாரி:** திரு சஞ்சீத் சிங் குரானா

**பின்னிணைப்பு B.**

**அர்ப்பணிப்பு அறிவிப்பு**

நான்,_____________________________________________, NAPP இன் குழந்தைகள் மற்றும் பாதிக்கப்படக்கூடிய வயதுவந்தோர்களின் பாதுகாப்பு பற்றிய கொள்கையை பற்றி அறிவுறுத்தப்பட்டிருக்கிறேன் மற்றும் அதற்கு இணங்கி நடக்க வேண்டும் என்ற நோக்கத்தையும் பின்பற்றுவதில் உறுதியாக உள்ளேன்.

கையொப்பமிட்டது: தேதியிட்டது:

பெயர் :

பதவி :

**பின்னிணைப்பு C பாதுகாப்பு அறிக்கை படிவம் ²**

*பின்னிணைப்பு A - பாதுகாப்பு அறிக்கை படிவம் 1²*

**ஆரம்ப அறிக்கை**

**ரகசியத்தன்மை –**

**ஒரு ' அவசியமாக தெரிந்து கொள்ள வேண்டும்' என்ற அடிப்படையில் மட்டும் பின்வருபவைப் பகிரப்படும்**

**முடிந்தவரை அதிகளவுத் தகவல்களை உள்ளடக்கிய முழுமையான படிவம்.**

**என்ன தெரிவிக்கப்படுகிறது?**

☐ துஷ்பிரயோகம் குற்றச்சாட்டு - துஷ்பிரயோகம் ஏற்படக்கூடும் என்ற பொதுவான சந்தேகம் / கவலை

☐ துஷ்பிரயோகம் சம்பவம் - உண்மையான துஷ்பிரயோகம் நடந்தது

☐ பாதுகாப்பு புகார் - குழந்தை மற்றும் / அல்லது வயது வந்தோரின் அடையாளம் வெளிப்படுத்தப்படுவது

**அறிக்கை விவரங்கள்:**

நேரம்: ______________ தேதி: ____________ இடம்: ________________________________________. ________________________________

**புகாரளிப்பவரின் விவரங்கள்:**

பெயர்: ____________________________________________நாடு: _________________________

முகவரி / தொடர்பு விவரங்கள்:

_____________________________________________________________________________________

_____________________________________________________________________________________

பிறந்த தேதி: _____________வயது: ________ பாலினம்: ___________ (ஆண் / பெண்)

பாதிக்கப்பட்டவருடனான உறவு:

_________________________________________________________________________________

FAIRTRADE
NETWORK OF ASIA & PACIFIC PRODUCERS

தொழில்: ______________________________ முதலாளி: ____________________________________

**பாதிக்கப்பட்டவரின் விவரங்கள்:** *(தெரிந்தால் முடிந்தவரை பூர்த்தி செய்யுங்கள்)*